ALPHA MIND POWER

# NEWSLETTER



April 2018

## From Guruji's desk....



My Dear Alpha Siddha,

I am sure this letter finds you in good health and good cheer!

I wish to write about our whatsapp groups. Initially we had a very tough time with the forward messages that were flooding the groups. Many Siddhas were leaving the groups only because they did not want to receive so much junk. These days it is deemed to be a criminal offence if objectionable material is posted by anyone in the group and the group admin can be held responsible.

Hence, we had to be very strict to remove people who kept posting forwards. With this harsh measure we were able to bring down the forward messages and the groups have become a bit more manageable.

Today there is another problem that we are facing. Many Alpha Siddhas are complaining to us about the number of requests for healing or personal goals being posted in the groups. Many have left the groups because they felt uneasy seeing so many details about illnesses being posted daily.

You must bear in mind that everyone cannot take such information easily. When you post a request for healing you must be aware that not every Alpha Siddha is inclined to sit and heal. Very few will take the time to do the healing. Most of them only post green color emoticons and forget about it. Others feel resentment on seeing the message. So, you end up only with unwanted negative energy.

I take this opportunity to remind you that you are a powerful Alpha Siddha. You know the healing techniques taught in various Alpha classes. Just the level 1 healing itself can give miraculous results. I want to see you as a more powerful Alpha Siddha.

Whenever any healing is required or any personal goal is to be energised, please sit and meditate and do it yourself. As an Alpha Siddha, you are powerful enough to manifest your goals. You know the techniques as well. You can also make use of our meditation track 'Alpha Self Healing'.

You can make it even more powerful by meditating during the group meditation timings and connecting with all other Alpha Siddhas. The timings are 5.30 am, 11 am, 7 pm and 10 pm.

Keep doing healing for yourself and others. It will increase your manifesting powers. Post your feedback in the groups once the healing is done. That will be more motivating to other Siddhas. It will also boost your own confidence in the power of your mind.

Wishing you awesome healings,

Blessings,

**Srimatha**



*AXIS Bank Saligramam Branch Inaugarated by Guruji*



*Guruji lighting lamp at AXIS Bank Saligramam Branch*

அன்புள்ள ஆல்ஃபா சித்தரே,

இக்கடிதம் உங்களை அடையும் பொழுது மிக நல்ல உடல் நலம் மற்றும் மன நலத்துடன் நீங்கள் இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நமது வாட்ஸப் குரூப்கள் பற்றி எழுத விரும்புகிறேன். ஆரம்பத்தில் பலர் பதிவு செய்த ஃபார்வர்ட் செய்திகளால் மிகுந்த சிரமத்துக்கு உள்ளானோம். பல சித்தர்கள் இது போல் கண்டபடி குவிந்து விடுவது பிடிக்காமலேயே குழுவை விட்டு வெளியேறி விட்டார்கள். இப்பொழுது கண்டிக்கத்தக்க விஷயங்கள் ஒரு குழுவில் பதிவு செய்யப்பட்டால் குரூப் அட்மின்னை கைது செய்யும் அளவுக்கு சட்டம் கூட இருக்கிறது.

அதனால் அடிக்கடி ஃபார்வர்ட் செய்திகளை பதிவிடுபவர்களை உடனடியாக குழுவிலிருந்து நீக்க வேண்டி இருந்தது. இந்த கடுமையான நடவடிக்கையால் ஓரளவுக்கு இந்த பிரச்சினையை கட்டுக்குள் கொண்டு வர முடிந்தது. குழுக்களை நிர்வகிப்பதும் சற்று சுலபமாக இருக்கிறது.

இன்று வேறு ஒரு விதமான பிரச்சினை எழும்பி இருக்கிறது. குழுக்களில் நோய் குணப்படுத்தவும் சொந்த இலட்சியங்களுக்கு சக்தி அளிக்கவும் கோரிக்கைகள் மிக அதிகமாக பதிவு செய்யப்படுவதை பற்றி பல ஆல்ஃபா சித்தர்கள் எங்களிடம் புகார் செய்திருக்கிறார்கள். நோயாளிகளைப் பற்றிய அதிகமான தகவல்களை தினமும் பார்க்க பிடிக்காமலேயே பலர் குழுக்களில் இருந்து விலகி விட்டார்கள்.

எல்லோராலும் இது போன்ற விஷயங்களை சுலபமாக எடுத்துக் கொள்ள முடியாது என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். நோய் குணப்படுத்தும் தியானம் செய்யும்படி நீங்கள் கோரிக்கை விடுக்கும் பொழுது எல்லா ஆல்ஃபா சித்தர்களாலும் அது முடியாது என்பதையும் உணர வேண்டும். வெகு சிலர் மட்டும் தான் அதை செய்கிறார்கள். பலர் பச்சை நிற வடிவத்தை குழுவில் பதித்து விட்டு அதைப் பற்றி மறந்து விடுகிறார்கள். மற்றவர்களுக்கு அதை கண்டதும் எரிச்சல் தான் வருகிறது. ஆக, கடைசியில் உங்களுக்கு கிடைப்பது தேவையற்ற தீய சக்தி மட்டுமே.

இத்தருணத்தில் நீங்கள் ஒரு சக்தி மிக்க ஆல்ஃபா சித்தர் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். பல ஆல்ஃபா வகுப்புகளில் கற்று தந்த வழி முறைகள் உங்களுக்கு தெரியும். கட்டம் 1ல் உள்ள தியானமே பல அற்புதங்களை செய்து தரக் கூடியது. உங்களை ஒரு சக்தி வாய்ந்த ஆல்ஃபா சித்தராக பார்க்கவே நான் விரும்புகிறேன்.

ஏதேனும் நோய் குணமடைய அல்லது தனிப்பட்ட இலட்சியங்களுக்கு சக்தியளிக்க வேண்டுமென்றால் நீங்கள் அமர்ந்து தியானம் செய்யுங்கள். ஒரு ஆல்ஃபா சித்தராக அதை செய்யும் சக்தி உங்களிடம் இருக்கிறது. உங்களுக்கு வழி முறைகள் கூட தெரியும். நமது 'நோய் தீர்க்கும் தியானம்' கேட்டும் இதை செய்யலாம்.

நமது கூட்டு தியான நேரங்களில் மற்ற ஆல்ஃபா சித்தர்களுடன் மனதால் தொடர்பு கொண்டு இதை செய்தால் மேலும் சிறப்பான பலன்கள் கிடைக்கும். அதற்கான நேரங்கள், காலை 5.30, 11 மணி, மற்றும் மாலை 7 மற்றும் 10 மணி.

உங்களுக்கும் மற்றவர்களுக்கும் நோய் தீர்க்கும் தியானம் அடிக்கடி செய்து வாருங்கள். உங்கள் சக்தியை இது அதிகரிக்கும். நோய் குணமானவுடன் உங்களது அனுபவத்தை குழுவில் பதிவு செய்யுங்கள். மற்ற சித்தர்களுக்கு இது ஒரு தூண்டுதலாக இருக்கும். அத்துடன் உங்கள் மனதின் சக்தியையும் இது அதிகரிக்க செய்யும்.

அற்புதமான அனுபவங்கள் உங்களுக்கு கிடைக்கட்டும்,

ஆசீர்வாதங்கள்,

ஸ்ரீமாதா



***Guruji with Alpha Siddhas at Chennai TEJAS CHAKRA Workshop***



***Guruji with Alpha Siddhas at Bangalore AISHWARYAM Workshop***




Today I attended **AISHWARYAM** class at Coimbatore. The energy received during the class was excellent. The fear to spend money has been dumped in agnikundam and now I am happy. The first reaction after the class is I brought a nice bag for my wife So no more spending fear thanks to Srimatha.

**Arun**

I am indebted to Srimatha for giving us this great tool called **ALPHA MEDITATION**. I have a daughter who is 20 years studying. For the past couple of years our relationship was not smooth in the sense she gets angry at whatever I do. Whatever I cook she will say not good etc. As per Srimatha's advice I started talking to her subconscious mind and everything seems to have changed. She is again her own sweet self. Thank you once again. Let everyone practice Alpha in this earth so that we can feel peace everywhere -- **Kamakshi**

One clearance from a government department was pending even though all paperwork was correct. Due to this there was heavy pressure from management to finish up. I tried in many ways in beta level but no use for more than three months.. Only yesterday I talked to subconscious mind of the concerned person who was holding it up.. Wonder.... Just now it was agreed to be cleared**..** **Nappinnai**

There was lot of quarelling in my house. No peace of mind. Then I wrote an email to Guruji to help me. Guruji advised me to use PSYCHIC ENERGY techniques and practise the meditation. I don't know how I forgot it. But after I started doing the meditation everything has changed. By using pendulum i had seen lot of positive energy in my house . Millions thanks to Guruji. **Arjunan**

Kodi Pranam to Guruji! Last Saturday I have attended Bangalore **AISHWARYAM** class. It was one of the pleasurable, beautiful and blissful experience in my life. Earlier I used to have aversion towards materialistic desire. But after this class only I realised that Aishwaryam can lead to satisfaction, content, detachment and even towards the spritual growth. Respectful Guruji, it is easy for you to take us to the heavenly abode of Aishwarya Maha Lakhsmi through guided meditation. You have given simple mantras to invoke Mahalakhsmi in our houses. And the Aishwaryam Pills work tremendously. For all this, we can tell kodi Pranam and Kodi times thank You! But it will not be sufficient for What You have given to us through this Workshop! Thank You Guruji! -- **Shivohum**

I had been allergic to dust & strong smell for quite a long time. I attended **SANJEEVANI** class to come out of this trouble. I did sanjeevani three times a day for two days. A miracle happened. I regained my strength & was cured of my allergy problem. Now I'm relieved of sneezing, nasal congestion. Strong smell does not have its effect on me. I have become normal & I feel very happy to share my experience with alpha siddhas. I owe my gratitude to Srimatha -- **Latha Venkateswari**

இன்று கோவையில் **ஐஸ்வர்யம்** வகுப்பில் கலந்து கொண்டேன். வகுப்பில் பெற்ற சக்தி மிக அதிகம். பணம் செலவழிப்பதில் இருந்த பயத்தை அக்னிகுண்டம் நெருப்பிலிட்டு பொசுக்கி விட்டோம். இப்பொழுது சந்தோஷமாக இருக்கிறேன். வகுப்பு முடிந்தவுடன் எனது மனைவிக்கு ஒரு புதிய பை வாங்கினேன். செலவழிப்பதில் இனி பயமில்லை.

**அருண்**

**ஆல்ஃபா** என்ற இந்த கருவியை நமக்கு கொடுத்த ஸ்ரீமாதாவுக்கு என்றும் கடன்பட்டிருக்கிறேன். எனக்கு 20 வயதில் ஒரு மகள் இருக்கிறாள். கடந்த இரண்டு வருடங்களாக எங்களுக்குள் நல்ல உறவு இல்லை. எல்லாவற்றுக்கும் கோபப் பட்டாள். நான் சமைப்பது கூட நன்றாக இல்லை என்பாள். ஸ்ரீமாதாவின் அறிவுரைப்படி அவளுடைய ஆழ்மனதுடன் பேசத் துவங்கினேன். எல்லாமே மாறி விட்டது. மறுபடியும் பழையபடி இனிமையான பெண்ணாக இருக்கிறாள். மீண்டும் நன்றி. இந்த பூமியில் அனைவரும் ஆல்ஃபா தியானம் பழகட்டும். நாம் நிம்மதியாக வாழலாம் ...**காமாக்ஷி**

அரசு அலுவலகத்திலிருந்து ஒரு ஒப்புதல் பெற வேண்டியிருந்தது. இதனால் மேலதிகாரியிடமிருந்து மிகுந்த அழுத்தம் இருந்தது. மூன்று மாதங்களுக்கு மேலாக பீட்டா நிலையில் எவ்வளவோ முயன்று பார்த்தேன். நேற்று தான் அதை நிறுத்தி வைத்திருந்தவருடைய ஆழ்மனதுடன் பேசினேன். ஆச்சரியம்.. இப்பொழுது தான் ஒப்புதல் கிடைத்தது. **நப்பிண்ணை**

எனது குடும்பத்தில் ஏகப்பட்ட சண்டைசச்சரவுகள் இருந்துகொண்டே இருந்தது. இதனால் யாருக்குமே மனநிம்மதி இல்லை. பிறகு குருஜி அவர்களுக்கு இமெயில் எழுதினேன். குருஜி அவர்கள் **சைகிக் எனர்ஜி** தியானத்தை செய்யுமாறு அறிவுறுத்தினார்கள். இந்த தியானத்தை செய்த பிறகு எனது வீட்டின் சக்தி முற்றிலும் நல்லதாக மாறியிருப்பதை பெண்டுலம் மூலம் கண்கூடாக தெரிந்துகொண்டேன். இதை செய்ய எப்படி மறந்தேன் என்று எனக்கே தெரியவில்லை . குருஜிக்கு கேடானுகோடி நன்றிகள்... **அர்ஜுனன்**

குருஜிக்கு கோடி நமஸ்காரம். சென்ற சனிக்கிழமை பெங்களூரில் **ஐஸ்வர்யம்** வகுப்பில் கலந்து கொண்டேன். என் வாழ்வில் ஒரு மிக உன்னதமான, அற்புதமான, சந்தோஷமான அனுபவம் அது. அதற்கு முன்பு லௌகீக பொருட்கள் மீது அதிக நாட்டமில்லாமல் இருந்தேன். ஆனால் இந்த வகுப்பிற்குப் பிறகு தான் ஐஸ்வர்யம் என்பது திருப்தி, நிறைவு, பற்றின்மை அத்துடன் ஆன்மீக வளர்ச்சியை நோக்கி கொண்டு செல்லக் கூடியது என்று புரிந்தது. மதிப்பிற்குரிய குருஜி, உங்கள் தியானத்தின் மூலம் ஐஸ்வர்ய மகாலக்ஷ்மியிடம் எங்களை மிக சுலபமாக அழைத்து சென்று விட்டீர்கள். எங்கள் வீட்டில் மகாலக்ஷ்மியை அழைக்க எளிய மந்திரங்கள் கொடுத்திருக்கிறீர்கள். **ஐஸ்வர்யம் மலர்மருந்து** ஆச்சரியப் படத்தக்க வகையில் செயல்படுகின்றன. அனைத்திற்க்கும் உங்களுக்கு கோடி முறை கோடி நமஸ்காரம் சொன்னாலும் தகும். ஆனால் இந்த வகுப்பில் நீங்கள் எங்களுக்கு கொடுத்துள்ளவற்றுக்கு அது ஈடாகாது. நன்றி குருஜி ... **ஷிவோஹம்.**

பல நாட்களாகவே எனக்கு தூசி மற்றும் சில வாசங்களால் அலர்ஜி இருந்தது. இதை விட்டு வெளிவர நான் **சஞ்சீவனி** வகுப்பில் கலந்து கொண்டேன். சஞ்சீவனி தியானத்தை ஒரு நாளுக்கு மூன்று முறை என்று இரண்டு நாட்கள் செய்தேன். ஆச்சரியம்! எனக்கு நல்ல தெம்பு கிடைத்தது, அலர்ஜியும் மறைந்து விட்டது. தும்மலும் மூக்கடைப்பும் குணமாகி விட்டது. இப்பொழுது எந்த வாசமும் என்னை பாதிப்பதில்லை. நான் நன்றாக இருக்கிறேன். என் அனுபவத்தை ஆல்ஃபா சித்தர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஸ்ரீமாதாவுக்கு நன்றிகள் பல! .. **லதா வெங்கடேஷ்வரி**

**ANNOUNCEMENT**

**'MANAME NALAMA'**

GURUJI'S PROGRAM ON POTHIGAI TV !

8.15 am Monday to Friday

You can also watch from mobile app **'DD POTHIGAI LIVE'**

அறிவிப்பு

**மனமே நலமா**

பொதுகை டிவியில் குருஜியின் நிகழ்ச்சி!

காலை 8.15 மணிக்கு திங்கள் முதல் வெள்ளி வரை

மொபைல் ஆப் **'DD POTHIGAI LIVE'** மூலமும் காணலாம்.

## ONLINE PAYMENT

You can now download mobile app INNOTYM to make any payments to AMP for workshops or products.
You can also pay through our website Payment Gateway

## ஆன்லைன் கட்டணம்

INNOTYM ஆப் உங்கள் மொபைலில் பதிவிரக்கம் செய்து AMP வகுப்புகள் அல்லது பொருட்களுக்கு சுலபமாக கட்டணம் செலுத்தலாம்.
நமது இணையதளத்தின் மூலமாகவும் கட்டணம் செலுத்தலாம்.

## Workshops Schedule

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Mumbai (English) | **AISHWARYAM** Level – 1 | 07/04/18<br>08/04/18 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel City Point<br>Khodadad Circle, Dadar T T Mumbai |
| Chennai (Tamil) | **PSYCHIC ENERGY** Level – 1 | 14/04/18<br>15/04/18 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Delhi (English) | **SANJEEVANI** Level – 1 | 21/04/18<br>22/04/18 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | The Lalit, Barakhamba Avenue, Connaught Place, New Delhi - 110001 |
| Madurai (Tamil) | **SANJEEVANI** Level – 1 | 05/05/18<br>06/05/18 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Poppys,Airport Ring Road,<br>Mattuthavani, Madurai |
| Salem (Tamil) | **SANJEEVANI** Level – 1 | 12/05/18<br>13/05/18 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel CJ Pallazzio,<br>201/6, Junction Main Road, [Near NH-7]<br>Salem – 636005 |
| Chennai (Tamil) | **TEJAS CHAKRA**<br>**KUNDALINI SHAKTHI**<br>Level – 1 | 01/06/18<br>02/06/18<br>03/06/18 | Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Bangalore (English) | **SPIRITUAL COUNSELING**<br>**SPIRITUAL COUNSELING** | 09/06/18<br>10/06/18 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | The Fern Citadel,<br>#41,Sheshadri Road, Anand Rao Circle,<br>Bengaluru – 560 009 |
| Chennai (Tamil) | **AISHWARYAM** | 17/06/18 | Sun | 9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Coimbatore (Tamil) | **TEJAS CHAKRA**<br>**SRIVIDYA**<br>Level – 1 | 22/06/18<br>23/06/18<br>24/06/18 | Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Regent ,<br>708, Avinashi Road,<br>Coimbatore |
| Chennai (Tamil) | **SPIRITUAL COUNSELING**<br>**SPIRITUAL COUNSELING** | 30/06/18<br>01/07/18 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar Road, T.Nagar, Chennai |

*Printed & Published for*

ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"

*Srimatha Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai – 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

*PRINTED MATERIAL*